செ.வெ. எண்: 256 நாள்: 11.04.2012

# பத்திரிக்கை செய்தி

உலக வங்கி நிதி உதவியுடன், ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, திருவொற்றியூர் AIR பகுதி, நொச்சி நகர், ஒக்கியம் துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு, பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் கட்டப்பட்டு வரும் 2048 குடியிருப்புகளுக்கு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பிய சுனாமியால் பாதிக்கப்பட்டோர் பட்டியலிலிருந்து 2048 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, வாரியத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. உலக வங்கி குழுவினரின் அறிவுரையின் பேரில் நொச்சி நகர் முதல் சீனிவாசபுரம் வரையுள்ள பகுதியில் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதிக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை கடந்த ஆறு மாதங்களாக விருப்ப மனு அளித்து, மின்னனு புகைப்படம் எடுக்குமாறு கோரப்பட்டது.

மேற்கண்ட பயனாளிகளில் இதுவரை 1251 பயனாளிகள் விருப்ப மனு கொடுத்து மின்னனு புகைப்படம் எடுத்துக் கொள்ள வரவில்லை. எனவே, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதிக்கு தெரிவு செய்யப்பட்டு, விருப்ப மனு அளிக்காத 1251 பயனாளிகளுக்கு கடைசி வாய்ப்பு, அறிவிப்பு மூலம், தனியாகவும் அளிக்க முடிவு செய்யப்பட்டது. எனவே இந்த அறிவிப்பு பிரசுரம் செய்த நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதிக்கு தெரிவு செய்யப்பட்டு, விருப்பம் அளிக்காத 1251 பயனாளிகள் உடனடியாக தங்களது விருப்ப மனுவினை சென்னை- 600 005, 5 காமராஜர் சாலை , தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அலுவலகத்தில் சமுதாய வளர்ச்சி அலுவலரிடம் தந்து, மின்னனு புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு விருப்பம் அளிக்காத பயனாளிகள் பெயரினை தெரிவு செய்யப்பட்ட பட்டியலிலிருந்து ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**